# பதவி வெற்றிடம்
## முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம்
## இலங்கை வக்ப் சபை
## சட்ட அலுவலகர் பதவி (தற்காலிக)

மேற்கண்ட பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**1.A.கல்வித் தகைமை**

1.இலங்கை பல்கலைகழக மானிய ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகத்தினால் சட்டத்துறையில் பட்டம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் இலங்கை உச்ச நீதிமன்றத்தில் வழக்கறிஞராக பதவியேற்றிருக்க வேண்டும்.

**B.ஏனைய தகைமைகள்**

தமிழ்,சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் ஆற்றலுடையவராகவும் கணனித்திறனில் தேர்ச்சிப்பெற்றவராகவும் இருத்தல் வேண்டும். வகுப் சம்பந்தமான அறிவும் தெளிவும் இருத்தல் மேலதிக தகைமையாக கருதப்படும்

**C.வயது:** விண்ணப்பதாரி 24 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு உட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.

**D. சம்பளம்** : ரூ 47,615 சம்பளத்திற்கு மேலதிகமாக வக்ப் சபையினால் அனுமதிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**E.நியமனத்தின் தன்மை** : ஒரு வருடம் தற்காலிக நியமன அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படுவதுடன் தேவைக்கேற்ப சேவை காலத்தை நீடிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பதாரரும்:
i.இலங்கையின் குடிமகனாக இருக்க வேண்டும்.
ii. பதவிக்குறிய கடமைகளை சிறப்பாக மேற்கொள்வதற்குறிய தேகாரோக்கியம் மற்றும் புத்திசுவாதீனம் உடையவராக இருத்தல் அவசியம்.
iii. சிறந்த பண்புகளையுடையவராக இருக்க வேண்டும்.

**விண்ணப்பங்கள் அனுப்பும் முறை:**

www.muslimaffairs.gov.lk என்ற திணைக்கள இணையத்தளத்தில் விண்ணப்பப்படிவத்தை பெற்று முறையாக பூர்த்தி செய்து முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் இல 180, ரீ.பீ ஜாயா மாவத்தை, கொழும்பு 10, எனும் முகவரிக்கு 05.09.2020 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் திணைக்களத்திற்கு கிடைக்கக் கூடியவாரு பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

**பணிப்பாளர்**
முஸ்லிம் சமயபண்பாட்டலுவல்கள் திணைக்களம்
இல 180, ரீ.பீ ஜாயா மாவத்தை,
கொழும்பு 10